வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc
info@wtsc.org.au
www.wtsc.org.au

# பேச்சுப் போட்டி - 2024

**ஆண்டு 9**

**(போட்டி நடைபெறும் நாள் 25/05/2024)**

அனைவருக்கும் வணக்கம்.

## நேர்பட ஒழுகு.

நேர்பட ஒழுகு என்னும் நன்னெறி ஆத்திசூடியில் கூறப்பட்டுள்ளது. நேர்பட ஒழுகு என்பது நேர்மையாக நடத்தலைக் குறிக்கும். நேர்மை என்பது நீதி, ஒழுக்கம், கருணை, மரியாதை, உண்மை, என பல பண்புகளை உள்ளடக்கியது. எந்தச் சூழ்நிலையிலும் இந்த விழுமியங்களைப் பின்பற்றி வாழ்வதே நேர்பட ஒழுகுவதாகும்.

ஒழுக்கத்தின் மேன்மையினைத் திருவள்ளுவர்,

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.”

என அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையும் நேர்மையும் இருந்தால் அஞ்சாத நெஞ்சம் உடையவர்களாக இருக்க முடியும்.

“எண்ணங்களில் நேர்மை இருந்தால், அதுவே உயர்வான வெற்றிக்கு வழிவகுக்கும்” என அப்துல் கலாம் கூறியுள்ளார். நாம் நேர்மையாக வாழும் முறையைச் சிறு வயதிலிருந்தே பழகிக் கொள்ளவேண்டும்.

நேர்மை என்பது எமது வாழ்வின் மிக உயரிய அறமாகும். நேர்மையானவர்கள் பேரன்பு மிக்கவர்களாகவும், நல்லெண்ணம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். நேர்மையாக இருப்பவர்கள் பிற மனிதர்களது நன்மதிப்பையும் அன்பையும் பெற்று மனநிறைவோடு வாழ முடியும். அவர்களது வாழ்க்கை செம்மையாகவிருக்கும்.

நன்றி. வணக்கம்.